* 226 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள நகராட்சிகளில் உள்ள ஆணையர்களில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தற்போது எத்தனை பேர்?

கட்டளை-ரெங்கநாதபுரம் சாலை

* 227 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர்-திருச்சி சாலையிலிருந்து பிரிந்து செல்லும் கட்டளை -ரெங்கநாதபுரம் சாலை எப்போது ஜல்லி ரோடாகப் போடப்பட்டது?

(இ) தற்போது எந்த நிலைமையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இச்சாலை 1963-64-ம் ஆண்டில் ஜல்லி ரோடாக போடப்பட்டது.

(இ) ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் இச்சாலையை சரிவர பராமரிக்க இயலவில்லை.

மாவட்டங்களில் மீன் விற்பனை நிலையங்கள்

*232. வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாவட்டந்தோறும் அரசின் சார்பில் மீன் விற்பனை நிலையங்கள் துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

உழவர்களுக்கு குடியிருப்புத் திட்டம்.

* 252 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு பின் தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் விவசாயத் தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் மூலம் வீடு கட்ட அரசாங்கம் இவ்வாண்டு பணம் ஒதுக்கியுள்ளதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு தொகை ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) தமிழ் நாட்டில் விவசாயத் தொழிலாளர்களுக்காக தனிப்பட்ட கூட்டுறவு வீடு கட்டும்